# என் வாழ்வின் இராகம் நீ இயேசுவே

என் வாழ்வின் இராகம் நீ இயேசுவே
என் வாழ்வின் பாடல் நீ இயேசுவே - 2
என் ஜீவ தாளம் உன் கோயில் சேர
உன் பாத நிழலில் சரணாகின்றேன்
( என் வாழ்வின் )

**1**
சோகங்கள் வந்து சொந்தங்கள் போனால்
நீ மட்டும் என்னை விட்டு பிரிவதில்லை
போராட்டம் என்னை சூதாடும் போது
உன் பார்வை எனைவிட்டு அயர்வதில்லை-2
நீ மட்டும் போதும் என் ஆயுள்காலம் - 2
உன் வானில் என் பாடல் நிலவாகுமே

( என் வாழ்வின் )

**2**
காலங்கள் தேய போராடும் வேளை
உன் பாதம் நிழலாக தொடர்கின்றது
என் வாழ்வும் தாழ்வும் உனதாகும் போது
உனை ஏற்கும் நம்பிக்கை வளர்கின்றது -2
என் ஜீவராகம் பூபாளமாகும் - 2
உன் வார்த்தை என்வாழ்வில் அரங்கேறுமே

( என் வாழ்வின் )